உ
சிவமயம்
# செய்தி மடல்
அகில இலங்கை இந்து மாமன்றம்
ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
ஆனித் திங்கள்
31ம் நாள்
(15.07.2009)

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. இலங்கை
தொலைபேசி : 011 2434990 – தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

## மாமன்றப் பிரதிநிதிகள் வவுனியா நலன்புரி முகாம்களுக்கு இருதடவைகள் விஜயம்

### நிவாரணப் பொருட்களை நேரில் கையளித்தனர்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் பலவிதங்களில் உதவி வருகிறது. இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பமான மாமன்றத்தின் இந்த நிவாரணப் பணி இப்போதும் தொடர்கின்றது.

மாமன்றப் பிரதிநிதிகள் இதுவரையில் இருதடவைகள் அதாவது கடந்த மே, ஜூன் மாதங்களில் வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களுக்கும் அங்குள்ள மருத்துவமனைக்கும் சென்று வந்திருப்பதுடன், நிவாரணப் பொருட்களை நேரடியாகவும் வழங்கியிருக்கிறார்கள். சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இதுதொடர்பான சகல ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார்.

இரண்டாவது தடவையாக கடந்த ஜூன் மாதத்தில் அங்குசென்ற மாமன்றப் பிரதிநிதிகள் குழுவில் திரு. சின்னத்துரை தனபாலா, திரு. நா. கார்த்திகேயன், திரு. வி. நடராஜா, திரு. க. சிவகுமாரன், திரு. கோ. இளையராஜா, திரு. த. திருஞானசம்பந்தர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். மாமன்ற அங்கத்துவ நிறுவனமான வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் திரு. ஞா. கேதீஸ்வரன் அவர்களும் வவுனியாவிலிருந்து மாமன்றப் பிரதிநிதிகளுடன் இணைந்து கொண்டார். மாமன்றப் பிரதிநிதிகள் குழுவினர் மன்னாரிலுள்ள நலன்புரி முகாம்களுக்கும், மருத்துவமனைக்கும் விஜயம் செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இந்த மடலில்....








நலன்புரி முகாம்களில்நிவாரணப்பொருட்கள் விநியோகம்

[பக்கம் – 1,3]



தெய்வத்திருமகள் – நூல்வெளியீடு

[பக்கம் – 4]

**மாமன்றத்தின் புதிய இணையத்தள முகவரி:**
www.hinducongress.lk

### வாழ்த்து

*வாழ்கவே வாழ்கவென் நந்தி திருவடி*
*வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்*
*வாழ்கவே வாழ்கமெஞ் ஞானத் தவன்தாள்*
*வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.*

**விரோதி வருடம் ஆனித் திங்கள் 31ம் நாள் (15.07.2009)**

## மாமன்றத்தின் குரல்

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம். மாமன்றத்தின் மற்றுமொரு செய்திமடல் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மனநிறைவு கொள்கின்றோம். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செய்திகளையும் மற்றும் செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களையும் அறியத்தரும் வகையில் இந்தச் செய்திமடல் வெளியிடப்படுகிறது.

பெரும்பாலான தமிழ் மக்கள் பலவித இழப்புகளுடன் இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், அவர்கள் அனைவருக்கும் உதவுவது இந்து மக்களாகிய எங்கள் கடமையாகும். அந்த வகையில் இவ்வருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து அகில இலங்கை இந்து மாமன்றமும் தன்னால் இயன்றவகையில் உதவி வருகிறது. இது பற்றிய தகவல்களை கடந்த மாதம் (ஜூன்) வெளியாகிய மாமன்ற செய்தி மடல் ஊடாக அறிந்திருப்பீர்கள். இந்த செய்தி மடலிலும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

மாமன்றத்தின் இந்த மனிதநேயப்பணி தொடருகிறது. மாமன்றப் பிரதிநிதிகள் இதுவரையில் இரு தடவைகள் வவுனியா நலன்புரி முகாம்களுக்குச் சென்று அங்கு தங்கியிருக்கும் மக்களுக்கும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கும் நிவாரணப் பொருட்களை நேரடியாகவே வழங்கியிருக்கிறார்கள். மாமன்றம் முன்னெடுத்துச் செல்லும் இத்தகைய மனிதநேயப் பணியில் இந்து மக்கள் அனைவரும் இணைந்து கொண்டு ஆதரவும், உதவியும் தரவேண்டும் என்பதே எங்கள் விருப்பமும் வேண்டுகோளுமாகும். இது சம்பந்தமான அறிவித்தல் இந்த செய்தி மடலில் வெளியாகியிருக்கிறது.

தமிழ் மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்வது என்பது உண்மையிலேயே துரதிர்ஸ்டவசமானதாகும். மக்களின் துயரங்களும், வேதனைகளும் முற்றாகவே நீங்க வேண்டும்; வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் சேர்ந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் விரைவில் அமையவேண்டும்; அது நிரந்தரமாகவே என்றும் தொடரவேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் விருப்பமும் எதிர்பார்ப்புமாகும். இதற்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*



## அமரர் பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

மாமன்றத்தின் முன்னாள் தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் நினைவாக, மாமன்றம் வருடந்தோறும் ஏற்பாடு செய்து நடத்திவரும் நினைவுப் பேருரைத் தொடரில், இவ்வருட பேருரை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி (நோன்மதி தினம்) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் "சைவம் எதிர்வுகூறும் சில புதிய பிரச்சினைகள்" எனும் பொருளில் பேருரையாற்றுவார்.

## அன்பு வேண்டுகோள்

## இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்களுக்கு தொடர்ந்து உதவுங்கள்

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்கள் போதுமான உணவு மற்றும் உடுபுடவை போன்ற அத்தியாவசிய வசதிகள் குறைந்த நிலையில் தொடர்ந்தும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். இந்த வேளையில் அவர்களுக்கு உதவுவது இந்து மக்களாகிய எங்கள் தலையாய கடமையாகும். எனவே, அகில இலங்கை இந்து மாமன்றம் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உடுப்புகளை கொழும்பு மகளிர் இந்து மன்றம், விவேகானந்த சபை உட்பட அதன் அங்கத்துவ சங்கங்களின் ஆதரவுடன் சேகரித்து இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்களுக்கு விநியோகித்து வருகிறது.

இதற்காக பிஸ்கட், தண்ணீர்ப் போத்தல்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் புதிய உடுப்புகள், படுக்கை விரிப்பு, துவாய், சாரம், சேலை, பாதணிகள் போன்றவைகளை தொடர்ந்தும் வழங்கி உதவுமாறு சகல இந்து மக்களையும் மாமன்றம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றது. விரும்புவோர் நிதியுதவிகளையும் செய்யலாம்.

நலன்புரி முகாம்களில் போஷாக்கின்றி வாடும் சிறுவர்களுக்கு பீடியா சுகர் (Pedia Sure) என்ற பால்மா வகையை மருத்துவர்கள் சிபார்சு செய்திருப்பதால், இவை பெருமளவு தேவைப்படுகின்றன. இவற்றையும் வழங்கி உதவலாம்.

***நிவாரணப் பொருட்களையும், நிதியுதவியையும் பின்வரும் சேகரிப்பு நிலையங்களில் வழங்கலாம்.***

**சரஸ்வதி மண்டபம்**
75, லோறன்ஸ் வீதி, கொழும்பு–04 (தொலைபேசி : 2585975)

**கொழும்பு மகளிர் இந்து மன்றம்**
15, பகத்தல வீதி, கொழும்பு–03 (தொலைபேசி : 2505938)

**விவேகானந்த சபை**
34, விவேகானந்த மேடு, கொழும்பு–13. (தொலைபேசி : 2422646)

***நிதியுதவியை மாமன்றத்தின் வங்கிக்கணக்கிலும் வைப்புச் செய்யலாம்.***

**இலங்கை வங்கி – லேக்ஹவுஸ் கிளை**
(Bank of Ceylon - Lake House Branch)
கணக்கு இல: (A/C No:) 0003268614
Branch Code No : 636
Swift Code No : BCEYL KLX

## "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்" நூல் அறிமுக விழா

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசை தினத்தையொட்டி, அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டிருக்கும் மேற்படி நூலின் அறிமுக விழா, கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் ஆகஸ்ட் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில், நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், உலக சைவப் பேரவைத் தலைவர் சிவத்திரு யோகானந்த அடிகள், தினக்குரல் நிறுவன அதிபர் திரு. எஸ்.பி. சாமி, வீரகேசரி வார வெளியீடு பொறுப்பாசிரியர் திரு. வி. தேவராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இந்த நூலின் விலை 500/= ரூபாவாகும். அறிமுக விழாவின்போதும், அதன் பின்னர் மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

# தொடரும் நிவாரணப் பணிகள்

அகில இலங்கை இந்து மாமன்றம், வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவிலும், மன்னாரிலும் உள்ள நலன்புரி முகாம்களில் அல்லலுறும் மக்களுக்கு முடிந்தளவு நிவாரண உதவிகளை வழங்க 2009 பெப்ரவரி முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. சேகரிக்கப்படும் மற்றும் வாங்கப்படும் பொருட்கள் அனைத்தும் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக அவ்வப்போது கையளிக்கப்பட்டு வருகின்றன.

இறுதியாக ஜூன் 25ம், 26ம், 27ம் திகதிகளில் நலன்புரி முகாம்களுக்கு நேரடியாகச் சென்ற மாமன்றப் பிரதிநிதிகள், வவுனியா, செட்டிக்குளம் மற்றும் மன்னார் பொது வைத்தியசாலைகளிலுள்ள நோயாளர்களுக்கும், 2009 ஆகஸ்ட் மாத க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் 700 மாணவர்களுக்கும், வலயம் 4 முகாமிலுள்ள ஏனைய 400 மாணவர்களுக்கும் அவர்களது 22 ஆசிரியர்களுக்கும், 600 குடும்பங்களுக்கும், வலயம் 4 முகாம் வைத்தியசாலைக்கும் தேவையான அத்தியாவசிய பொருட்களை நேரடியாகக் கையளித்திருந்தனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில், 200 குழந்தைகளுக்கான கம்பளிகள், ஆடைவகைகள், விரிப்புக்கள் மற்றும் சுகாதார துணிகளும், 216 கருவுற்ற தாய்மார்களுக்கான அன்மும் (Anmum) சிறப்புப் பால்மா பொதிகளும், பேபி செரமி பொருட்களும், மாமன்ற வெளியீடான "சிவ வழிபாட்டு மலர்" பிரதிகளும், "இந்து ஒளி" சஞ்சிகைகளும், விபூதிப் பொதிகளும் அத்துடன் ஒவன் எனும் ஆரோக்கிய மருந்து வில்லைகள் 11,880 உம் வழங்கப்பட்டன.

பால்மா, தேயிலை, உடுபுடவைகள், பாதணிகள், பிஸ்கட், தண்ணீர் போத்தல்கள், பாய்கள், மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன. வலயம் 4 முகாமிலுள்ள குடும்பங்களுக்கு பால்மா பொதிகள், பிஸ்கற் வகைகள், பாதணிகள், பனடோல் மாத்திரைகள், ஆண்கள் - பெண்கள் - சிறுவர்களுக்கான உடுப்பு வகைகள், படுக்கை விரிப்புகள், 2 முதல் 10 வயது வரையான சிறுபிள்ளைகளுக்கு அத்தியாவசியமான புரதச்சத்தும் ஏனைய கனியுப்புக்களும் அடங்கிய பீடியா சுகர் (Pedia Sure) பால்மா பொதிகள் முதலியன வழங்கப்பட்டன.

வலயம் 4 முகாம் வைத்தியசாலையில் 108 கருவுற்ற தாய்மார்களுக்கான அன்மும் (Anmum) சிறப்புப் பால்மா பொதிகளும், பெண்களுக்கான சுகாதார ஆடைகள் 316 உம், 228 ஐந்து லீற்றர் தண்ணீர் போத்தல்களும், பீடியா சுகர் (Pedia Sure) பால்மா பொதிகள் 216 உம் வழங்கப்பட்டன.

செட்டிக்குளம் பொது வைத்தியசாலையிலுள்ள சிறுபிள்ளைகளுக்கு பீடியா சுகர் (Pedia Sure) பால்மா பொதிகள் 120 உம், மன்னார் பொது வைத்தியசாலையிலுள்ள சிறுபிள்ளைகளுக்கு பீடியா சுகர் (Pedia Sure) பால்மா பொதிகள் 120 உம் ஜூன் மாத நிவாரணப்பணியின் போது வழங்கப்பட்டன. இவை இந்து மாமன்றத்தின் சமூக நலன் குழுவின் தலைவர் திரு. சி. தனபாலா அவர்கள் தலைமையில் சென்ற மாமன்ற பிரதிநிதிகளால் பகிர்ந்தளிக்கப்பட்டன. பொருட்களை நேரடியாக முகாம்களில் கையளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் செய்து கொடுத்திருந்தார்.

மாமன்றம் தொடர்ந்தும் நிவாரணப் பொருட்களைச் சேகரித்து வழங்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் வரையில் அவர்களுக்குத் தேவையான நாளாந்த அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது அவசியமாகிறது. எனவே மக்களும் நலன்விரும்பிகளும் தொடர்ந்து தங்களால் இயன்றளவில் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

நிவாரணப் பணிகள் தொடர்பாக மாமன்றத்திற்கு கிடைத்த நிதியுதவியிலிருந்து, ரூபா 664,640/- பெறுமதியான பீடியா சுகர் (Pedia Sure)பால்மாவும், ரூபா 243,750/- பெறுமதியான துவாய்களும், ரூபா 521,175/- பெறுமதியான சாரங்கள் மற்றும் பெண்கள், சிறுவர்களுக்கான உடுப்பு வகைகள், பேபி செரமி பொருட்கள், ரூபா 390,000/- பெறுமதியான பால்மா வகைகள், ரூபா 19,600/- பெறுமதியான மாணவர்களுக்கான பேனாக்கள், ரூபா 91,305/- பெறுமதியான சவர்க்கார வகைகள், ரூபா 54,000/- பெறுமதியான பனடோல் மாத்திரைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு கடந்த ஜூன் மாதத்தில் மாமன்றத்தால் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நலன்புரி முகாம்களிலுள்ள மாணவர்களுக்கு மே மாதத்தில் 10000 அப்பியாசப் புத்தகங்களும் ஜூன் மாதத்தில் 6000 அப்பியாசப் புத்தகங்களும் மாமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கிறது.

மாமன்றத்தின் நிவாரணப் பணிக்கு ஆதரவாக மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களும் 'பீடியா சுகர்' பால்மாவை பெருமளவில் அன்பளிப்புச் செய்திருப்பதுடன், மலையக மாதர் முன்னணியினரும் பல நிவாரணப் பொருட்களை மாமன்றத்துக்கு வழங்கியிருக் கிறார்கள் என்பதையும் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

# இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன்கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிவீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பதினொரு ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது சிறப்புக்குரிய விஷயம். தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக "சக்தி இல்லம்" என்ற பெயரில் இன்னொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் மேற்படி இரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்த தினமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் வதியும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் போசனம் வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**இதற்கான நன்கொடை விபரம் பின்வருமாறு அமைகிறது:**

| | | |
|---|---|---|
| காலைப் போசனம் : | 7500/– | ரூபா |
| மதிய போசனம் : | 10000/– | ரூபா |
| | 12500/– | ரூபா (விசேடம்) |
| இரவுப் போசனம் : | 10000/– | ரூபா |
| | 12500/– | ரூபா (விசேடம்) |

போசனத்திற்கான நன்கொடை அல்லது வேறு வகையில் உதவ விரும்புபவர்கள் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல : 011 – 2625588) அல்லது அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல : 011–2434990, தொலைநகல் இல : 011–2344720

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் குருபூசை வைபவமும் நினைவுப் பேருரையும்



கடந்த வருடம் (2008) ஜூன் மாதம் 15ஆம் திகதியன்று சிவபதமடைந்த தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசை வைபவம் இம்மாதம் (ஜூலை) 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

தேவஸ்தான நிர்வாகசபையின் பொருளாளர் திரு. க. ஏழூர்நாயகம் அவர்களின் வரவேற்புரையின் பின் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் பிரார்த்தனை உரையை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து தலைமையுரையின் பின்னர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்கள் நினைவுரை நிகழ்த்தினார்.

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டிருந்த "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்" என்ற நூலும் இந்த நிகழ்வின்போது வெளியிட்டுவைக்கப்பட்டது. மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை சிறப்புரையையும், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நூலின் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார்கள்.

தேவஸ்தான வெளியீடான திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய முதலாம் திருமுறை நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. சிவலிங்கராஜா இந்நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். திருமதி அ. கயிலாசபிள்ளை அவர்கள் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

மறுநாள் 4ஆம் திகதி சனிக்கிழமை மாலை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற முதலாவது ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை "இன்றைய சூழலில் இந்து சமயத்தவர்கள் ஆற்றவேண்டிய சமூகக் கடமையும், சிவத்தமிழ்ச் செல்வியின் வழிகாட்டலும்" எனும் பொருளில் பேருரையாற்றினார்.

## மாணிக்கவாசகர் குருபூசை

அகில இலங்கை இந்து மாமன்றமும், ஈழத்து திருநெறித் தமிழ் மன்றமும் இணைந்து மாணிக்கவாசகர் குருபூசையை கடந்த ஜூன் 27ஆம் திகதியன்று, மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தியிருந்தன.

விநாயகர் அகவல், பஞ்ச தோத்திரம், திருவாசகம் என்பன ஓதப்பட்டதுடன், கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும், இரத்மலானை – கொழும்பு இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் பா. சதீஸ்குமார், பம்பலப்பிட்டி – கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி கோகிலா ஜெயபாலசிங்கம் ஆகியோரின் உரைகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன. மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத் தலைவர் திரு. சி. தியாகராசா ஆகியோரும் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினார்கள்.

## மாமன்றத்தின் புதிய நியமனம்

மாமன்ற உபதலைவர்களுள் ஒருவராகவும், மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவராகவுமிருந்த சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் அவர்களின் மறைவுக்குப் பின், வெற்றிடமான மேற்படி இரு பதவிகளுக்கும் புதிய நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினர்களான கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் மாமன்றத்தின் புதிய உப தலைவராகவும், திரு. க. ஜெகதீசன் சமய விவகாரங்கள் குழுத் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

## பிரார்த்தனை நிகழ்வு

இடம்பெயர்ந்தும், ஏனைய பல வழிகளிலும் இன்னலுறும் மக்களின் விமோசனத்திற்காக இறையருள் வேண்டி வழிபாடும், பிரார்த்தனையும் கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று (நோன்மதி தினம்) மாலை 4.30 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றினார். சுவாமி சர்வரூபானந்தா மகராஜ், ஸ்ரீரவீந்திர சாஸ்திரிகள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வின்போது, வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களுக்குச் சென்று வந்த மாமன்றப் பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த திரு. சின்னத்துரை தனபாலா (மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர்), திரு. மு. கதிர்காமநாதன் (மாமன்ற சமூக நலன் குழுச் செயலாளர்), திரு. ந. கார்த்திகேயன் (மாமன்ற உதவிச் செயலாளர்) ஆகியோர் நலன்புரி முகாம்களின் நிலைமைகளையும், இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**ALL CEYLON HINDU CONGRESS**

**To:**

**General Secretary**
All Ceylon Hindu Congress
No. 91/5, Sir Chittampalam,
A. Gardiner Mawatha,
Colombo - 02.

Telephone: 011-2434990 Fax: 011-2344720 Email: hinducongress@gmail.com Website:www.hinducongress.lk

UNIE ARTS (PVT) LTD. TEL: 0112330195